
# இயேசுவின் திருப்பாடுகளைச் சிந்திப்போமா?



தொகுத்தவர்

டாக்டர் தே. ஜோ. அ. ஜான்
பாளையங்கோட்டை.

# முன்னுரை

"சிலுவைப் பாதை" என்ற பக்தி முயற்சி அமைதியற்ற உள்ளங்களைத் தேற்றிடும் அருமருந்தாகும். எனவே அதுபற்றிய விளக்க நூல்கள் வந்துகொண்டே உள்ளன. என்னுடைய இச் சிறு முயற்சி தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப நமது சிந்தனையைத் தூண்டும் வகையில் அமையவேண்டுமென்பதே என் கருத்து. ஆகவே இந்நூலைப் பயன்படுத்தும் அன்பர்கள் தக்க முறையில் பயன்படுத்துவதோடு என் பெற்றோரின் ஆன்மா ஈடேற்றத்திற்காகவும் மன்றாடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.


இச் சிறு நூலை என் பெற்றோருக்குக் காணிக்கையாக்குகிறேன்.

**தே. ஜோ. அ. ஜான்**

9 - 2 — 1994

9, மின்சார வாரியக் குடியிருப்பு
விரிவாக்கப் பகுதி,
திருநெல்வேலி - 11.

# கண் கண்ட தெய்வம்



**ச. தேவசகாயம்பிள்ளை - ஞானப்பிரகாசியம்மாள்**

| | | |
|---|---|---|
| பிறப்பு : 12-1-1889 | \| | பிறப்பு : 11-3-1903 |
| இறப்பு : 5-2-1976 | \| | இறப்பு : 9-2-1974 |

எங்கள் அன்புப் பெற்றோருக்கு அஞ்சலி.

மக்கள் :- மறைத்திரு. தே. ஜே. க. அமிர்தம்
டாக்டர் தே. ஜோ. அ. ஜான்
திரு. தே. ம. பி. சவரிராஜ்

மருமக்கள் : திருமதி பிலோஜான்
திருமதி சாந்தாபிதேலிஸ்

மற்றும் பேரப்பிள்ளைகளும்-கொள்ளுப்பேரன்களும்.

# இயேசு பெருமான்
# திருப்பாடுகள் பற்றிய சிந்தனை
## உத்தம மனஸ்தாபம்

### பொது சிந்தனை

இயேசு பெருமான் மனித இன மீட்புக்காக உயிர்த் தியாகம் செய்து அனைத்து மக்களையும் இறைவனுக்கு ஏற்புடையவர்களாக்கினார். அவர் வாழ்ந்த மூன்றாண்டு பொது வாழ்வில் சென்ற விடமெல்லாம் நன்மையே செய்து கொண்டு வந்தார்.

தூய அருளப்பர் தாம் எழுதிய நற்செய்தியில் கூறுவது போல.

> "தம் மகனில் விசுவாசங்கொள்ளும் எவரும் அழியாமல் முடிவில்லா வாழ்வை பெறும் பொருட்டு அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (அருள : 3 : 16)

இத்தகைய நிபந்தனையற்ற மேலான அன்பை நாம் நன்கு உணர இயேசுவின் பாடுகளை சிந்திப்பது சிறப்பாகும். நம் பொருட்டு அவர் துன்பத்தை ஏற்றுக் கொண்டது தவிர்க்க முடியாதது. இறைவனின் திரு உள்ளமும் அதுவேயாகும். எனவே அதற்காக வருந்தாது, அதற்குக் காரணமான நமது தவறுகளையும், நம் குழந்தைகள் செய்த தவறுகளையும், உற்றார் உறவினர் செய்த குற்றங் குறைகளையும் நினைவு கூர்ந்து வருந்தி இறைவனோடு ஒப்புரவாகி நம் வாழ்வை வளமடையச் செய்ய சிந்தனை செய்து இந்த முப்பது மணித்துளிகள் செலவிடுவது நமக்கு நலம் பயப்பதாகும்.

## முதல் நிலை

அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

அதுயாதெனில் உமது திருச்சிலுவையால் உலகை மீட்டருளினீர்.

### இயேசுவை சிலுவை மரணத்திற்குத் தீர்ப்பிடுகின்றனர்.

நாட்டில் நீதி மன்றங்கள் செயல்படுவது நீதியை நிலை நாட்டவே என்பதை நாமறிவோம். அங்கு நடை பெறும் சர்ச்சைகள் குற்றவாளி தண்டனையிலிருந்து விடுபடாதிருக்கவும், குற்றமற்றவனுக்கு அநீதி ஏற்படா திருக்கவும் என்பது யாவரும் அறிந்த உண்மையே ஆகும். ஆனால் இயேசுவோ மாசற்றவர் என்று அனை வரும் அறிந்திருந்தும் அவர் மீது பொய்க் குற்றங்களைச் சுமத்தி அன்றைய நாளில் அவமானமாகக் கருதப்பட்ட சிலுவைச் சாவைத் தண்டனையாகப் பெறச் செய்தனர். இன்றும் இதுபோன்று குற்றமற்றவர்கள் தண்டிக்கப் படுவதையும் உண்மை குற்றவாளிகள் தண்டனைக்குத் தப்பித்துக் கொள்வதையும் நாம் இவ்வுலகில் காண் கின்றோம்.

ஆகவே உண்மைக்குப் புறம்பானவற்றைப் பிறர்மீது நாம் சுமத்தாமலும், பிறர் பெயரைக் கெடுக்காமலும், நீதி மன்றங்களில் புறங்கூறாமலும் செயல்படும் ஆற்றலை இறைவன் நமக்கருள மன்றாடுவோம்.

நீதி தேவனாகிய இயேசுவே! உண்மைக்காகவும், நீதிக் காகவும் எங்கள் உயிரையே தியாகம்செய்ய நேர்ந் தாலும் துணிவோடு நாங்கள் செயல்பட எமக்கருள் புரிய உம்மை வேண்டுகின்றோம். பிதா சுதன் ....

எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி தயவாய் இரும். மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் சாந்தியடைவதாக. ஆமென்.

## இரண்டாம் நிலை

அன்பு நிறை இயேசுவே .................

**இயேசுவின் தோளில் பழுவான சிலுவையைச் சுமத்துகிறார்கள்.**

செல்வந்தர்களும், கொள்ளை இலாபம் ஈட்டும் வணிகர்களும், அரசுகளும் செய்யும் கொடுமையால் பணப் பற்றாக்குறையையும், வரிச்சுமையையும் ஏழைகள் மீதும், நடுத்தர மக்கள் மீதும் அவர்கள் சுமத்தி வருகிறார்கள். அதனால் அவர்கள் அல்லலுற்று, மீள முடியாத வறுமையால் வாடுவதை நாம் அன்றாடம் காணுகின்றோம். இதைக் குறித்தே இயேசு பெருமான், "மறைநூல் அறிஞரும், பரிசேயரும் பளுவான சுமையைக்கட்டி மக்களுடைய தோள்மேல் வைக்கிறார்கள். தாங்களோ அதை ஒரு விரலாலும் அசைக்க மாட்டார்கள்" என்று எடுத்துக்கூறி அவர்களுக்கு ஐயோ கேடு என்று எச்சரிக்கிறார்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு உரிமை வாழ்வு அளிக்க வந்த இயேசுவே! நாங்கள் ஏழை எளியவரின் வயிற்றிலடிக்காமல், உழைப்பவனுக்கு உரிய ஊதியம் வழங்கி, அவனும் மனிதன் என்பதை உணர்ந்து மனித நேயத்தோடு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம். பிதா சுதன் ....

எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி ..............

## மூன்றாம் நிலை

அன்பு நிறை இயேசுவே .................

**இயேசு சிலுவைச்சுமை தாளாமல் முதன் முறை தரையில் விழுகிறார்.**

வறுமையின் கொடுமையாலும், தகுந்த ஊதியம் இல்லாமலும், விலைவாசி ஏற்றத்தாலும் அரசுகளின் வரிச்

சுமையாலும் ஏழை எளிய மக்கள் வாழ இயலாமல் கீழே வீழ்ந்து கிடக்கின்றனர். அவர்கள் நிலை கண்டு மனம் இரங்கி அவர்களுக்கு உதவிட தன்னலம் கருதி வாழும் நமக்கு மனமில்லை. ஊர் மெச்ச மேடையில் முழங்கு கிறோம். வீழ்ந்து கிடக்கும் நமது உடன் பிறப்புக்களை கை தூக்கி விட நல்ல மனதைத் தரும்படியாக இறை வனை வேண்டுவோம்.

பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிவோடு ஆதரவற்றோரை அரவணைக்கும் இறைவா! நாங்கள் தன்னலம் நீக்கி, பிறர் நலங்கருதி, ஆதரவற்றோருக்கு அபயமளித்து அவர்கள் துயர் துடைக்கும் மேலான எண்ணத்தை எமக்களிக்க உம்மை மன்றாடுகின்றோம்.

பிதா சுதன் ...

எங்கள் பேரில் தயவாய் ................

## நான்காம் நிலை

அன்பு நிறை யேசுவே! ................

### இயேசு தன் அன்புத் தாயைச் சந்திக்கிறார்.

இயேசுவைக் கருத்தரித்த நாளிலிருந்து அவரைக் கல்லறையில் வைக்கும் நாள்வரை எத்துணை இடர் பாடுகளை கன்னிமரியாள் சந்தித்திருப்பாளென்று சற்று சிந்தித்துப் பார்ப்போம். ஏழ்மை நிலையிலும் தன் அன்பு மகனை தகுந்த முறையில் வளர்த்து ஆளாக்கி உலகிற்கு அர்ப்பணித்த அந்தத் தியாக உள்ளம் மேலானது என்பதில் எள்ளளவும் அய்யமில்லை. அத் தகைய தாயை சிலுவை சுமந்து செல்லும் பொழுது சந் தித்த யேசுவின் மன நிலையும் தாயின் மன நிலையும் எத் தகையது என்பதை எண்ணுகின்ற நாமும் நமது தாயை எவ்வாறு பேணிக் காக்க வேண்டுமென்று சிந் தித்து நமது வாழ்விலும் பெற்றவளை முதுமையிலும் அன்பு செய்து வாழ இறைவன் நமக்கு அருள்பாலிக்கும் படி வேண்டிக் கொள்வோம்.

இவ்வுலக வாழ்வின் இறுதிவரை தன் தாயை அன்பு செய்து வந்த இயேசுவே! உம்மை நாங்கள் பின்பற்றி வாழ அருள் தாரும். பிதா சுதன் ....

எங்கள் பேரில் ...............

## ஐந்தாம் நிலை

அன்பு நிறை இயேசுவே! ...............

**சீமோன் என்பவர் இயேசு சிலுவை சுமந்து செல்ல உதவுகிறார்.**

''உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'' என்று உண்மையான நட்புக்கு இலக்கணம் வகுத்தவன் தமிழன். ஒருவருக்கு இடர்ப் பாடு வரும்பொழுது பிறருடைய தூண்டுதல் இல்லாமல் தாமாகவே முன்வந்து உதவுவதே மேலான செயலாகும். இங்கு சீமோன் இயேசுவுக்கு உதவி செய்ய கட்டாயப் படுத்தப்பட்டாலும் உதவி செய்தார் என்று நாமறிகி றோம். ஆகவே அவரைப் போலன்றி நாம் தாமாகவே முன்வந்து பிறாது துன்பத்தைத் துடைத்து உதவ பெருந்தன்மையான உள்ளத்தை நமக்கு இறைவன் அருள மன்றாடுவோம்.

எவ்வித நிபந்தனையையும் எதிர்பாராமல் நமக்கு அன்றாடம் உதவியருளுகின்ற இறைவா! உம் அடிச் சுவட்டை பின்பற்றி வாழ உதவி செய்யும். பிதா சுதன்....

எங்கள் பேரில் ...............

## ஆறாம் நிலை

அன்பு நிறை இயேசுவே ...............

**வெரோணிக்கம்மாள் என்ற பெண் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள்.**

பிறருக்கு உதவி செய்ய பலவேளைகளில் துணிச்சல் தேவைப்படுகிறது. ஓர் ஏழைக்கு உதவி செய்ய நமக்கு

மனமிருந்தாலும், நம்மைப்பற்றி பிறர் என்ன கருதுவார்களோ என்ற எண்ணத்தில் உதவி செய்யாது தட்டிக் கழித்து விடுகிறோம். நல்ல சமாரியன் உவமைக் கதையில் இயேசு கூறுவதுபோல குற்றுயிராய் கிடந்த யூதனுக்கு உதவிட; குருவும், கோயில் பணியாளனும் முன் வராமல், கண்டும் காணாததுபோலச் சென்று விடுகின்றனர். யூதர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட சமாரியன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பவன் யூதனென்று அறிந்தும், அவன் மீது மனமிரங்கி தன் பயணம் தடைப்பட்டாலும், உதவிசெய்து அவனைக் காப்பாற்றுகிறான். அத்தகைய துணிச்சலும், மனிதாபிமானமும் கொண்ட நல்ல மனதை நமக்கருள இறைவனை வேண்டுவோம்.

யூத தலைமைக் குருக்களுக்கும் அறிஞர்களுக்கும் அஞ்சாமல் வறியவருக்கும், அடிமைப் பட்டோருக்கும் மறுவாழ்வு அளிக்க வந்த இயேசுவே! எவ்வித சூழ்நிலையிலும் மனத்துணிவோடு பிறருக்கு நல்லவற்றைச் செய்ய நல்ல உள்ளத்தை அருளும். பிதா சுதன்.... எங்கள் பேரில் ...............

## ஏழாம் நிலை

அன்பு நிறை யேசுவே ...............

**இயேசு இரண்டாம் முறை தரையில் வீழுகிறார்.**

வறுமையிலும், வேலையில்லாத் திண்டாட்டத்திலும் தினமும் அல்லல்பட்டு பசிப்பிணியால் சோர்ந்து விழும் மக்களுக்கு நாம் என்ன உதவி செய்கிறோம்? பையிலுள்ள 5 அல்லது 10 காசை வீசி எறிந்து விட்டு நமது கடமை முடிந்ததாக எண்ணிச் செல்லுகிறோம். ஒரு நாளைக்கு நான்கு வேளை உண்கிறோம். ஒருவேளை உணவு கிடைக்கவில்லையாயின் சினங்கொள்ளுகிறோம். மிதமிஞ்சி உண்ணுகிறோம். உணவை வெளியில் கொட்டுகிறோம். அண்டை வீட்டான் ஒரு வேளை முத

லாய் நிறைவாக உண்ண உணவின்றி தவிப்பதை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. சிலவேளைகளில் அது அவன் 'தலை விதி' கடவுள் சாபம் என்று கூறி வாளா யிருக்கிறோம். அத்தகைய இரக்கமற்ற செயலுக்காக மனம் வருந்தி ஆண்டவனிடமும் அயலானிடமும் மன்னிப்பு கேட்போம்.

வருந்திச் சுமை சுமப்பவரை தன்னிடம் அழைத்து அவர்களுக்கு அருள்பாலிக்கத் துடிக்கும் இறைவா! எங்கள் அயலானின் பசிப்பிணியைப் போக்க எங்களால் இயன்றதனைத்தையும் செய்ய தாராள உள்ளத்தைத் தாரும், பிதா சுதன்....

எங்கள் பேரில் ...............

## எட்டாம் நிலை

அன்பு நிறை யேசுவே ! ...............

**எருசலேம் மகளிருக்கு**

**இயேசு ஆறுதல் கூறுகிறார்.**

நம்மைச் சுற்றியுள்ளோர் உயிர் இழப்பினாலோ, பொருள் இழப்பினாலோ அல்லது வேறு பல துன்பங்களாலோ அழுது துடிக்கும் பொழுது நாம் அவர்கள் துன்பங்களில் பங்கு கொண்டு ஆறுதல் வழங்குகிறோமா? அல்லது ஏளனம் செய்கிறோமா? அல்லது கண்டும் காணாமலும் அலட்சியமாய் இருக்கிறோமா? சற்று சிந்தித்துப் பார்ப்போம். சாதிமத இன வேறுபாடின்றி உதவி செய்கிறோமா? அல்லது கிறிஸ்தவர்களுக்குத் தான் உதவி செய்வோமென்று சொல்லி, எல்லா மக்களும் இறைவனின் பிள்ளைகள் என்ற பரந்த எண்ணத்தை மூடி மறைக்கிறோமா? அவ்வாறு மனிதத் தன்மையையிழந்து செயல்பட்டிருப்போமாகில் அதற்காக வருந்தி இறைவனின் மன்னிப்பைக் கேட்போம்.

பிறரது துன்பங்கண்டு மனமுருகிய இயேசுவே! நாங்

கள் பிறரது துன்ப வேளையில் அவர்களுக்கு ஆறுதல் அளித்து உதவிட நல்ல மனதைத் தாரும்.

பிதா சுதன்....

எங்கள் பேரில் ..................

## ஒன்பதாம் நிலை

அன்பு நிறை இயேசுவே ..................

**இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகிறார்.**

நாமெல்லோரும் மீண்டும் மீண்டும் தவறுகள் செய்து மனமாற்றமடையாமல் கடின இதயத்தோடு வாழ்ந்து வருகிறோமா? சிந்தித்துப் பார்ப்போம். மீண்டும் மீண்டும் தவறிழைப்பது மனித இயல்புதானே என்று நமக்குள் சமாதானம் கூறிக் கொள்ளுகிறோமா? மனமாற்றம் இல்லையென்றால் வாழ்வில் முன்னேற்றமில்லை. இயேசு உடல் பலவீனத்தால் பலமுறை தரையில் வீழ்ந்தாலும் மீண்டும் எழுந்து தனது இலக்கை நோக்கி துன்பப்பயணத்தை மேற்கொண்டாரல்லவா? அத்தகைய உள்ள வலிமையை இறைவன் நமக்கருள வேண்டிக்கொள்வோம்.

வலுவற்றவருக்கு வாழ்வளிக்கும் வல்லவாகிய இறைவா! நாங்கள் மீண்டும் மீண்டும் தவறுகள் செய்யாது மனமாற்றம் பெற்று உமது உதவியால் திட உள்ளங்கொண்டு வாழ வரமருளும்.

பிதா சுதன்....

எங்கள் பேரில் ..................

## பத்தாம் நிலை

**இயேசுவின் உடைகளைப் பறிக்கிறார்கள்.**

மானத்தைக் காக்க மனிதனுக்கு உடைகள் தேவை "ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" சுயநினைவு இழந்த பயித்தியக்காரனே உடைகளைப் புறக்கணிப்பான். எனினும் பெண்களில் சிலர் ஆடைகுறைப்பால் அடக்கமற்ற நிலையில் இளைஞர்களின் உள்ளங்களைக்

கெடுக்கும் அவல நிலை, இன்று எங்கும் காணப்படுவ தொன்றாகும். ஆடம்பர உடையை என்றும் நாடுவோர் தெரு ஓரமாக ஆடையின்றி அல்லது கந்தை துணியோடு கிடக்கும் ஏழை மக்களைச் சுரண்டி வாழ்பவர்களாவர். அவர்களுக்குச் சேரவேண்டிய உடமைகளைப் பறித்துக் கொண்டு வாழ்கின்ற செல்வந்தர்கள் போலி வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றனர். அத்தகைய இழி நிலையான வாழ்வு நமக்குத் தேவையில்லை என்பதை உணர இறைவனை வேண்டுவோம்.

ஆடை இழந்து அவமானப்படுத்தப்பட்ட இயேசுவே! வறியவரின் மானங்காக்க எங்களுக்குள்ள உடைகளை அவர்களோடு பகிர்ந்து கொள்ளும் மேலான எண்ணத்தை தர வேண்டுகின்றோம். பிதா சுதன் ... எங்கள் பேரில் ...............

## பதினொன்றாம் நிலை

அன்பு நிறை யேசுவே! ...............

### இயேசுவை சிலுவையில் மூன்றாணியால் அறைகிறார்கள்.

நாம் நமது அயலான், உடன் பணியாற்றுபவர் இவர் களை நமது பொறாமை என்ற கயிற்றால் கட்டிப்போட்டு வாழ்க்கையில் அவர்கள் முன்னேறவிடாது தடுத்து விடுகிறோம். அவர்கள் உத்தியோக உயர்வைக் கண்டு அழுக்காறு கொள்ளுகிறோம். நமது பேனா முனையால் பிறருக்கு அநியாயமாய் தீர்ப்பிடுகிறோம். அவர்கள் பெயர் கெட்டுபோகக் காரணமாய் இருக்கிறோம். இது கொலை செய்யும் கொடுமையிலும் தீங்கானது. பிற ருடைய முன்னேற்றத்திற்கு இடையூறாய் இருக்கும் கொடுமையை நாம் விலக்கி வாழ இறைவனின் அருளை வேண்டுவோம்.

மூன்றாணிகளால் சிலுவையில் முடக்கப்பட்ட இயேசுவே! பிறருடைய பெருமை, கீர்த்தி இவற்றைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடையாமல் இருக்கும் இழி நிலையை மாற்றி, அவர்கள் முன்னேற்றத்திற்கு உதவிடும் நல்ல பண்பை எமக்குத் தாரும். பிதா சுதன் .... எங்கள் பேரில் ................

## பன்னிரண்டாம் நிலை

அன்பு நிறை இயேசுவே! ................

**இயேசு சிலுவை மரத்தில் உயிர் விடுகிறார்.**

கோழை பலமுறை சாகிறான். ஆனால் வீரனுக்கு சாவு ஒருமுறைதான் வரும் என்பது பழமொழி. அது போல இயேசு சாவுக்கு அஞ்சாதவராய் அவரைக் கொல்லத் தேடியவர்களிடம் தன்னையே கையளிக்கிறார். சிலுவையில் உயிர்விடு முன்னர் தன் சாவுக்குக் காரணமான அனைவரையும் மன்னிக்கும்படி தந்தையாகிய இறைவனை வேண்டுகிறார். தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தாயை அனாதையாக உலகில் விட்டுச் செல்லாமல் தன்னால் மிகுதியாக அன்பு பாராட்டப்பட்ட சீடன், அருளப்பரிடம் ஒப்படைத்துக் கண்காணிக்கும்படி செய்கிறார். தன்னோடு சமமாக சிலுவைச் சாவுக்குத் தீர்ப்பிடப்பட்ட கள்வர் இருவரில் தனது குற்றங் குறைகளை எண்ணி வருந்தியவனுக்கு அழியா வாழ்வுக்குப் பரிந்துரை செய்கிறார். தனக்குக் கொடுக்கப்பட்ட மீட்புப் பணியை நிறைவேற்றியதாக நிறைவு கொண்டு உயிர் விடுகிறார்.

நாமும் நமது உயிர் பிரியும் வேளையில் மகிழ்ச்சியான உள்ளத்தோடு நிறைவு பெற்று சாவுக்கு அஞ்சாத மனநிலை பெற்று விளங்குவோமா? சற்று சிந்திப்போம்.

வீரச்சாவை மேற்கொண்ட இயேசு பெருமானே! இவ்வுலகில் சாவு என்பது வாழ்வின் முடிவல்ல. நிலையான

பேரின்ப பெருவாழ்வின் தொடக்க நிலை என்ற பெருமித எண்ணத்தோடு நாங்கள் உயிர்விட வரம்தாரும்.

பிதா சுதன் ....

எங்கள் பேரில் ................

## பதிமூன்றாம் நிலை

அன்பு நிறை இயேசுவே!

**இயேசுவின் திருஉடலை அவர் தாயார் மடியில் வைக்கிறார்கள்.**

இயேசுவின் தாய் மரியாள் எத்துணை மன வலிமை உடையவளாய் இருந்திருக்க வேண்டும். முப்பது ஆண்டுகள் வளர்த்து உலக மக்களின் மீட்புக்காக தனது ஏக மகனை அர்ப்பணித்த அத்தாய் அந்த மக்களே கொலையும் செய்து இறந்த உடலை அவள் மடியில் வைத்தார்கள் என்று எண்ணும் போது நமது உள்ளம் உருகுகின்றதல்லவா? குழந்தையாக இயேசு அவள் மடியில் தவழும் பொழுது எத்தகைய மகிழ்ச்சியடைந்திருப்பாள். பன்னிரெண்டு வயதில் மகனைக் காணாது துடித்தபோது அவள் உள்ளம் எத்துணை வேதனை அடைந்திருக்கும். மக்களுக்கெல்லாம் அவர் நன்மை செய்து கொண்டு வருகிறார் என்று அறிந்தபோது மீண்டும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருப்பாள். அத்தகைய மகனை இழந்து அவல நிலையில் அமர்ந்திருக்கும் தாயின் உள்ளத்தை சற்று சிந்திப்போம். இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் இவ்வுலகைக்கண்டு அஞ்சாமல் உள்ளத்தைத் தேற்றிக்கொண்டு இறந்த உடலைத் தன் மடியில் தாங்கிக் கொண்டிருந்திருப்பாளென்பதே உண்மை. அத்தகைய உள்ளமே நமக்கு நம் வாழ்வில் நம்பிக்கையூட்டும். ஆகவே அத்தகைய வலிமை வாய்ந்த உள்ளத்தை நாம்பெற இறைவனிடம் அத்தாய் வேண்டிப் பெற்றுத்தருவாளாக.

தியாகத்தின் சிகரமாய் விளங்கும் தேவ அன்னையே! எங்களுக்கும், எங்கள் மக்களுக்கும் எங்கள் நாட்டின் நலனுக்கும் எங்களை அர்ப்பணித்து வாழ இறைவன் வரமருள எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிதா சுதன் ....

எங்கள் பேரில் ................

## பதினான்காம் நிலை

அன்பு நிறை யேசுவே!

**இயேசுவை**

**கல்லறையில் அடக்கம் செய்கின்றனர்.**

பிலாத்துவிடம் ஆணைபெற்று, அரிமத்தியாவூர் சூசை என்பார் இயேசுவின் திருவுடலை சிலுவையினின்று இறக்கி, நல்ல மணம் பொருட்களோடு வெள்ளைத் துணியால் சுற்றிக்கட்டி யூதர்களுடைய மரபுப்படி புதுக் கல்லறை ஒன்றில் அடக்கம் செய்தார். நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் தினமும் அனாதையாக விடப்பட்டவர்களின் இறந்த உடலைக் காண்கிறோம். கண்டும் காணாததுபோல் போய்விடுகிறோம். நம்மால் பணம் செலவிட இயலாவிடினும், நகரசபை அதிகாரிகளிடம் தெரிவித்து அவ்வுடலை அடக்கம் செய்யலாம். பணமில்லாமல் அடக்கம் செய்யத் தவித்துக்கொண்டிருக்கும் ஏழைக் குடும்பங்களுக்கு உதவி செய்யலாம். இத்தகைய சிறந்த பணியை இதுவரை செய்யத் தவறினாலும் இனியாவது செய்ய முயற்சிப்போம். பட்டினிச்சாவைக் கண்டு பரிதாபப்படுவதோடு அமையாமல், பட்டினிச் சாவை எதிர்நோக்கி இருப்போருக்கு இரங்கி மனிதாபிமானத்தோடு நம்மால் இயன்ற உதவி அனைத்தையும் செய்ய முன் வருவோம்.

அன்பான இறைவா! பிறருடைய மகிழ்ச்சியில் பங்கு பெற விழையும் நாங்கள் பிறருடைய இடர்ப்பாட்டிலும்

வறுமையிலும் பங்கு பெற்று அவர்களுக்கு ஆறுதலளிப்பதுபோல அவர்கள் துன்பத்தையும் துடைக்க மேலான உள்ளத்தைத் தாரும். பிதா சுதன் ....

எங்கள் பேரில் ..................

## பதினைந்தாம் நிலை

அன்பு நிறை இயேசுவே ..................

**இயேசு மரித்த மூன்றாம் நாள் உயிர் பெற்றெழுந்தார்.**

இயேசு மரித்து உயிர்த்தெழவில்லையாயின் கிறிஸ்தவ சமயமே இல்லை. அத்தனையும் வீணாகக் கருதப்படும். அவர் உயிர் பெற்றெழுந்ததே சாவை வென்றார் என்பதின் வெளிப்பாடாகும். அதுவே யாவருக்கும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். மனித இன மீட்புத் திட்டத்தின் முடிவாகும். இயேசுவின் பாடுகளைச் சிந்திக்கும் நாம் அவரது மகிழ்ச்சியில் பங்கு பெற, அவர் அளித்த புது வாழ்வை நாம் பெற்று மகிழ வேண்டுமாயின் அவரது வழிகளைப் பின்பற்றி வாழவேண்டும். அவரது உயிர்த் தியாகத்தால் நாம் பெற்ற பேரின்ப வாழ்வுக்காக அவருக்கு நன்றி கூறுவோம்.

St. ஜூட்ஸ் பிரஸ், பாளையங்கோட்டை.